[1975 நவம்பர் 4

திரு. என். டென்னிஸ் : அமைச்சர் அவர்கள் கூறும்போது இரண்டு இடங்களுக்கு மட்டும்தான் இந்த உதவி கொடுக்கப்பட்டதாகக் கூறினார்கள். மீன்பிடி தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக வேறு இடங்களுக்கும் நிதி வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தற்போது நெல்லை மாவட்ட சம்மேளனமும், செங்கல்பட்டு சென்னையைச் சேர்ந்த சம்மேளனமும்தான் விண்ணப்பம் போட்டார்கள். அவர்களுக்கு நிதி ஆதாரம் அளிக்கப்பெற்றிருக்கிறது. மேலும் இது போன்ற கூட்டுறவு மீனவ சம்மேளனங்கள் விண்ணப்பித்தால் அவைபற்றி ஆய்வு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பெரியார் குடில், பாடலூர்.

* 181 வினா—**புலவர் சி. பழனிசாமி :** மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பாடலூர் என்ற கிராமத்தில் தந்தை பெரியாரின் பெயரில் "பெரியார் குடில்" என்ற அனாதை இல்லம் ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ மூன்றாண்டுகள் ஆகியும் அதற்கு அங்கீகாரம் அளிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அங்கிகாரம் அளிக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :

(அ) 12—6—75 நாளிட்ட அரசு ஆணை பலவகை எண். 438-ல் "பெரியார் குடில்" என்ற இல்லத்திற்கு அரசு மானிய உதவிகள் பெற அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் சி. பழனிசாமி : இந்தக் குடில் நாட்டில் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற்கே ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே மதங்களைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இராமகிருஷ்ண குடில் போன்றவற்றிற்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அந்தச் சலுகைகள் எல்லாம் இந்தக் குடிலுக்கும் வழங்கப்படுமா ? குறிப்பாக இந்தக் குடிலுக்கு நிலம் வேண்டும் என்று பல ஆண்டுகளுக்கு

1975 நவம்பர் 4]

முன்பே விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தக் குடிலுக்கு அண்மையில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தை கையகப் படுத்திக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பெரியார் குடிலுக்கு அங்கீகாரம் அளிக்கப்படாததற்குக் காரணம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது இடவசதி அளிக்கப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். பொதுவாக கல்விச் சட்டப்படி இன்றையதினம் அனாதை இல்லங்கள் என்ற பெயரால் நடைபெறுகிற இல்லங்கள் ஒரு ஆண்டு வரை முறையாக நடத்தப் பட்டு கல்வித் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் பரிந்துரை செய்யப்படுமானால் அரசுத்துறை மூலம் முறையான சலுகைகளை, நிதி ஆதாரங்களைப் பெற இப்போதிருக்கிற கல்விச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் அவர்கள் கோருகிற நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வருவாய்த் துறை பரிந்துரை செய்தால் அதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. செ. அரங்கநாயகம்: மூலக் கேள்வியில் அனாதை இல்லம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கேட்டபோது பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற் காக என்று கேட்டார்கள். பெரியார் குடில் என்ன பணியைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: இந்தக் குடிலுக்கு அங்கீகாரம் அளிக்கப்படுவதற்குள்ள பரிந்துரைகளை கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். 1976-77-ல் இது முறையாக அங்கீகாரம் பெற இருக்கிறது. அதற்குப் பிறகு தான் அதன் நடைமுறைகளைப்பற்றி உறுப்பினர் அவர்களுக்கு விவரம் அளிக்க முடியும்.

சுகாதார ஊழியர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ்.

***182 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

ஊராட்சி மன்றங்கள் பேரூராட்சிகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சுகாதார மேஸ்திரி களுக்கும், சுகாதார ஆய்வாளர்களுக்கும் சைக்கிள்